

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2048 | ஜூலை 27, 2017 | புரட்சி 16 | முழக்கம் 28 | விலை: ரூ.3.00

## சென்னை விழாவில் கொளத்தூர் மணி பேச்சு

# பெரியார் கொள்கையை செயல்படுத்தியவர், காமராசர்

*திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, ஜூலை 15ஆம் நாள் சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய காமராசர் பிறந்த நாள் விழாவில் 'பெரியாரும் காமராசரும்' என்ற தலைப்பில் ஆற்றிய உரை:*

"காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளியேறி காங்கிரசை வீழ்த்தியே தீருவேன் என அறிவித்த பெரியார், அதே காங்கிரஸ் கட்சியில் இருந்த காமராசரை அரவணைத்தார் என்றால் அதற்கு என்ன காரணம்? பெரியாரின் அடியொற்றி செயல்பட்டார் காமராசர் என்பதுதான். தேசிய இயக்கத்தில் இருந்தாலும் தமிழர்களின் உரிமைக்காகப் பாடுபட்டார். மறுக்கப்பட்ட தமிழர்களின் உரிமைகளுக்கான தடைகளை தகர்ப்பதில் பெரியாருக்கு இருந்த அதே உணர்வு காமராசருக்கும் இருந்திருக்கிறது. பெரியாருக்கு இருந்த கருத்து வீரியம் காமராசருக்கும் இருந்திருக்கிறது.

காமராசரது வாழ்க்கை வரலாற்றைப் படிக்கும்போது அவரது மாணவப் பருவத்திலேயே பெரியாரின் கொள்கைத் தாக்கம் இருந்திருப்பதைப் பார்க்க முடிகிறது. பள்ளிப் பருவத்திலேயே 'மந்திர-தந்திரங்களை' காமராசர் எதிர்த்திருக்கிறார். பீதாம்பர அய்யர் என்பவர் 'மந்திரங்களை' செய்ததை நேரில் பார்த்து அவர் எப்படி எல்லாம் அதை செய்கிறார் என்பதை சக மாணவர்களிடம் செய்து காட்டி விளக்கியிருக்கிறார். 21 வயது இளைஞராக இருக்கும்போதே விருதுநகரில் பெரியாரை அழைத்து மாநாடு நடத்தியிருக்கிறார். பள்ளியில் ஒழுங்காகப் படிப்பது இல்லை என்று கேரளாவில் உள்ள அவரது தாய்மாமன் வீட்டுக்கு காமராசரை அவரது பெற்றோர்கள் அனுப்பினார்கள். அங்கே போயும் வைக்கத்தில் பெரியார் போராட்டம் நடத்தியபோது அந்தப் போராட்டத்தில் பங்கெடுத்திருக்கிறார்.

ஒரு தேசியவாதியாக அவர் போராடவில்லை. தமிழர் உணர்வு என்ற அடிப்படையிலேயே போராடியிருக்கிறார். மொழிவாரிப் பிரிவினைகளின்போது 1953ஆம் ஆண்டிலேயே ஆந்திரா தனி மாநிலமாகப் பிரிந்துவிட்டது. கேரளா, தமிழ்நாடு, கர்நாடகம் என்ற மாநிலங்களும் மொழி வழியாகப் பிரியாமல் தடுப்பதற்காக மூன்று மாநிலங்களையும் இணைத்து 'தட்சிணப் பிரதேசம்' ஒன்றை உருவாக்க முயற்சிகள் நடந்த போது பெரியார் அதைக் கடுமையாக எதிர்த்தார். பெரியார் ஒரு கன்னடர் என்றும் கன்னடர், தெலுங்கர் உரிமைகளுக்காக தமிழர் நலனை அடகு வைத்தவர் என்றும், இப்போது சிலர் குற்றம்சாட்டுகிறார்கள். பெரியாருக்கு அத்தகைய உணர்வு இருந்திருக்குமானால், அல்லது திராவிடர் நாடே தேவை என்று கருதியிருந்தால் அவர் தட்சிணப் பிரதேச திட்டத்தை ஆதரித்திருப்பார். தமிழர் நலன் என்ற உணர்வின் காரணமாகவே அத்திட்டத்தை பெரியார் எதிர்த்தார். தட்சிணப் பிரதேசம் என்ற ஒன்று அமைந்துவிட்டால், தமிழர்களின் வேலை வாய்ப்புகளை, மலையாளிகளும் கன்னடர்களும் பறித்துக் கொண்டுபோய் விடுவார்கள்; அவர்கள் எஜமானர்களாகி விடுவார்கள்; தமிழன் எடுபிடியாகத்தான் இருப்பான் என்றார் பெரியார். இது குறித்து முடிவெடுக்க பெங்களூரில் முதல்வர்கள் மாநாட்டைக் கூட்டினார் நேரு. தட்சிணப் பிரதேசம் உருவானால் 'இரத்தக் களரிதான்' ஏற்படும் என்று பெரியார் தந்தி மூலம் எச்சரித்தார். பெரியார் எந்த கருத்தைக் கூறி எச்சரித்தாரோ அப்படியே அதே கருத்தை நேருவிடம் கூறினார் காமராசர். காமராசர் ஒரு தேசிய கட்சியில் இருந்தாலும், அவர் மொழி வழி மாநிலங்கள் பிரிவது தேசியத்துக்கு எதிரானது என்று கருதவில்லை. இரு தலைவர்களுமே, தமிழ்நாடு தமிழர் நலன் என்ற கருத்தில் பிரிக்க முடியாதபடி ஒன்றுபட்டு நின்றார்கள்.

இங்கே குலக்கல்வித் திட்டம் பற்றி பேசினார்கள். ராஜாஜி அத் திட்டத்தைக் கொண்டுவந்தபோது காமராசர் அது காங்கிரஸ் கட்சியின் முதல்வர் கொண்டு வருகிற திட்டம் என்பதற்காக ஆதரிக்கத் தயாராக இல்லை. அதை எதிர்த்தார். அப்போது அத்திட்டத்துக்கு புதிய கல்வித்திட்டம் என்று பெயர் சூட்டப்பட்டிருந்தது. பள்ளிக் குழந்தைகள் அரை நேரம் அவரவர் பெற்றோரின் குலத் தொழிலை செய்ய வேண்டும் என்பது அத்திட்டம்.



### கை ரேகையைப் பாருங்கள்

காமராசருடைய அனுபவம் சார்ந்த நிர்வாகத் திறமைக்கு ஒன்றைக் குறிப்பிட வேண்டும். அப்போதெல்லாம் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் சேர்க்கையில் முதலமைச்சர்களுக்கு "தேர்வு உரிமைகள்" (கோட்டா) உண்டு. அந்த உரிமையின்கீழ் இடம் கேட்டு முதலமைச்சருக்கு ஏராளமான விண்ணப்பங்கள் வரும். இப்போதெல்லாம் அத்தகைய இடங்களுக்கு உறவினர்கள், கட்சிக்காரர்களிடமிருந்து சிபாரிசுகள் வரும். அல்லது பணத்துக்கு அந்த இடங்களை விற்பார்கள். அப்போது இந்த சீர்கேடுகள் கிடையாது. மருத்துவத் துறை செயலாளர், 'ஏராளமாக இடம் கேட்டு விண்ணப்பங்கள் வந்திருக்கிறதே; இதில் யாரைத் தேர்வு செய்வது' என்று காமராசரிடம் கேட்டார். சிறிது நேரத்தில் காமராசர்இதற்கு தீர்வு கூறினார். "விண்ணப்பத்தில் பெற்றோரின் பெயர் என்று இருக்குமிடத்தில் கையெழுத்துப் போடாமல் கைரேகைப் பதித்திருப்பவர்களின் விண்ணப்பங்களை தேர்வு செய்து அனுப்புங்கள்" என்று கூறினார். (கைதட்டல்) அதுவரைப் பள்ளிக்கூடப் பக்கமே திரும்பாத, படிக்காத பெற்றோர்களின் வீட்டுப் பிள்ளைகள் மருத்துவம் படிக்கட்டும் என்று காமராசர் நினைத்தார்.

**உரையிலிருந்து**

இப்போது பா.ஜ.க. ஆட்சி 2015ஆம் ஆண்டு குழந்தைத் தொழிலாளர்கள் உரிமைச் சட்டத்தில் ஒரு திருத்தம் கொண்டு வந்தது. 14 வயதுக்குட்பட்ட குழந்தைகள் பள்ளி நேரம் முடிந்த பிறகோ அல்லது விடுமுறை நாட்களிலோ அவர்களது பாரம்பர்யத் தொழிலை செய்யலாம் என்கிறது இந்த புதிய கல்விக் கொள்கை. ராஜாஜி கொண்டு வந்தது குலக் கல்வி. இப்போது குலத் தொழிலை பலரும் கைவிட்டு நகர்ப்புறத்தில் குடியேறி வேறு தொழிலுக்கு மாறி விட்டார்கள். பல குடும்பங்கள் 'அவுட் சோர்சிங்' முறையில் வேலைகளை எடுத்து தொழில் செய்து வருகின்றன. பள்ளிக் குழந்தைகள் இந்தப் பாரம்பர்யத் தொழிலை செய்வதில் பெற்றோர்களுக்கு உதவலாம் என்று குழந்தைகளை உடல் உழைப்பில் பயன்படுத்தக் கூடாது என்றிருந்த சட்டத்தைத் திருத்தி மாற்றியமைக்கிறது, பா.ஜ.க.வின் இந்த புதிய கல்விக் கொள்கை. அன்று 'குலக்கல்வி'; இன்று 'பாரம்பர்யக் கல்வி'யாக வருகிறது.

அன்று ராஜாஜி கொண்டு வந்த 'புதிய கல்வி' கொள்கைக்கு 'குலக்கல்வித் திட்டம்' என்று பெரியார் பெயர் சூட்டினார். அந்தப் பெயர்தான் நிலைத்தது. குலக்கல்வித் திட்ட எதிர்ப்பு மாநாட்டை சென்னையில் பெரியார் கூட்டினார். நீடாமங்கலம் அ.ஆறுமுகம் என்ற பெரியார் தொண்டர் தலைமையில் குலக்கல்வித் திட்ட எதிர்ப்புப் பிரச்சாரப் படை ஒன்று நீடாமங்கலத்திலிருந்து புறப்பட்டு, நடைபயணமாகவே சென்னை வந்தது. பெரியார், "பெட்ரோலும் தீப்பந்தமும் தயாராக இருக்கட்டும். ஒவ்வொருவரும் கத்தி வைத்துக் கொள்ளுங்கள். நான் நாள் குறித்து அறிவிப்பேன். அக்கிரகாரம் எரிய வேண்டும்" என்று வெளிப்படையாகவே அறிக்கை விடுத்தார். எச்சரிக்கை செய்தாரே தவிர, நாள் குறிக்கவில்லை. குலக்கல்வி எதிர்ப்புப் படை சென்னை வந்தடைந்தது. அப்போது ராஜாஜி பதவி விலகி, காமராசர் முதல்வராகிவிட்டார். குலக்கல்வி எதிர்ப்புப் படையினர், காமராசரை கோட்டையில் சென்று சந்தித்தனர். 'நல்ல சேதி வரும் போய் வாருங்கள்' என்றார் காமராசர். நான்கே நாள்களில் குலக்கல்வித் திட்டத்தை ஒழித்தார் காமராசர். பெரியார், காமராசரின் இந்தச் செயலை மாய்ந்து மாய்ந்து பாராட்டி மகிழ்ந்தார்.

5 சதவீதம், 8 சதவீதம் என்றிருந்த தமிழர்களின் கல்விக் கற்றலை 31 சதவீதமாக உயர்த்திய பெருமை காமராசரையே சாரும் என்று எழுதினார் பெரியார்.

'தகுதி திறமை' கெட்டுப் போகிறது என்று இடஒதுக்கீட்டை எதிர்த்தப் பார்ப்பனர்களுக்கு சரியான பதிலடி தந்தார் காமராசர். இங்கே பேசியவர்கள் அதை எல்லாம் கூறினார்கள். 'தகுதி திறமை மோசடி' என்று கருத்துகளை எல்லாம் தொகுத்து பெரியார் ஒரு நூலாகவே வெளியிட்டார்.

அது மட்டுமல்ல; அய்.ஏ.எஸ். போன்ற அகில இந்திய தேர்வுகளை தாய்மொழியில் எழுத அனுமதிக்க வேண்டும் என்று குரல் கொடுத்தவர் காமராசர். இப்போது அனைத்து இந்திய தேர்வுகளை இந்தி அல்லது ஆங்கிலத்தில்தான் எழுத முடியும். 22 சதவீதம் ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற வேண்டும் என்ற முறை அய்.ஏ.எஸ்.சுக்கு வந்தபோது வடநாட்டில் அதைக் கடுமையாக எதிர்த்தார்கள். நாங்கள் ஏன் ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற வேண்டும் என்று கேட்டார்கள். ஆனால் நமக்கு தாய்மொழியில் எழுத உரிமையில்லாமல் சாதாரண மத்திய அரசு பணிகளுக்குக்கூட 100 சதவீதம் ஆங்கிலத்தில் எழுத வேண்டியவர்களாக இருக்கிறோம்.

அகில இந்திய கட்சியில் இருந்தாலும் டெல்லிக்காரன் சொல்வதை எல்லாம் அப்படியே அடிபணிந்து நான் கேட்பவன் அல்ல என்று ராஜாஜிக்கு பதில் சொன்னவர்காமராசர். ஒரு வரலாற்றுத் தகவலைக் குறிப்பிட வேண்டும். பாகிஸ்தான் பிரிவினையை ஆதரித்த ராஜாஜி, 1942இல் காந்தி அறிவித்த வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை ஆதரிக்கவில்லை. அப்போது காங்கிரஸ் கட்சியிலிருந்தே விலகிக் கொண்டார். அதற்குப் பிறகு காங்கிரஸ் அதிகாரத்துக்கு வரப்போகிறது என்பதை புரிந்து கொண்டு மீண்டும் காங்கிரசில் சேர முனைகிறார். டெல்லியில் அகில இந்திய காங்கிரஸ் தலைவராக இருந்த அபுல்கலாம் ஆசாத்தை

(3ஆம் பக்கம்)

# சீனா – இந்திய முரண்பாடும் பார்ப்பனர்கள் "தேச பக்தியும்"

'அண்டை நாடுகளுடன் இந்தியா போர் தொடுக்குமானால் இந்தியாவால் 10 நாள்கள்கூட தாக்குப் பிடிக்க முடியாது' – இப்படி ஒரு கருத்தை ஏதேனும் ஒரு இயக்கத்தின் தலைவர் கூறியிருந்தால், 'தேச விரோதி' என்ற கூச்சல் காதைத் துளைத்திருக்கும். "தேச விரோதிகளைக் கைது செய்", "குண்டர் சட்டத்தில் உள்ளே தள்ளு" என்று பார்ப்பன பா.ஜ.க. "ராஜாக்கள்" பாய்ந்து குதறியிருப்பார்கள். இந்து முன்னணிகள் முற்றுகைப் போராட்டம் என்று கிளம்பியிருக்கும். தொலைக்காட்சிகளில் விவாதங்கள் அனல் பறந்திருக்கும். ஆனால் இப்படி ஒரு கருத்தை கூறியிருப்பது – மத்திய தலைமை கணக்கு மற்றும் தணிக்கைக் குழு. அதன் பரிந்துரையில்தான் இந்த அபாயச் சங்கு ஊதப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல;

இராணுவ தொழிற்சாலை வாரியத்தின் செயல்திறனில் குறைகள் மலிந்திருப்பதை சுட்டிக்காட்டியும் அரசின் நடவடிக்கை ஏதும் இல்லை என்றும் அந்த அறிக்கை கூறுகிறது. இந்த அறிக்கையை மோடி ஆட்சி நாடாளுமன்றத்திலும் கடந்த வாரம் சமர்ப்பித்திருக்கிறது. எந்த நேரத்திலும் சீனாவோடு போர் வெடிக்கலாம் என்ற செய்திகள் வலம் வரும் சூழலில் இப்படி ஒரு அறிக்கை!

அதுமட்டுமல்ல; இந்திய இராணுவத் தயாரிப்பான 'போபோர்ஸ்' பீரங்கியில் உதிரி பாகங்களாக ஜெர்மன் தயாரிப்பு என்று கூறி சீனாவில் தயாரிக்கப்பட்ட போலி உதிரி பாகங்களை **'சித்சேல்ஸ் சிண்டிகேட்'** என்ற டெல்லி நிறுவனம், இராணுவத்திற்கு விற்றிருக்கிறது. அந்த நிறுவனத்தின் மீது சி.பி.அய். வழக்கு தொடர்ந்திருக்கிறதாம்.

"இந்து தேசியவாதிகள்" தேவையின்றி சீனாவோடு போர் நடத்த துடிக்கிறார்கள் என்று சீனாவிலிருந்து வெளி வரும் 'குளோபல் டிரஸ்ட்' பத்திரிகை கட்டுரை தீட்டுகிறது. "சீனா-இந்திய எல்லைப் பகுதிகளை ஆக்கிரமித்திருக்கிறது. எனவே சீனாவிடமிருந்து எல்லைப் பகுதிகளை மீட்க போரைத் தொடங்க வேண்டும்" என்று இந்து மக்கள் கட்சித் தலைவர் அர்ஜூன் சம்பத், 'தினமணி'யில் கட்டுரை எழுதுகிறார்.

முன்னாள் தேசிய பாதுகாப்பு ஆலோசகரான எம்.கே. நாராயணன், 'இந்து' ஆங்கில நாளேட்டில் (ஜூலை 18) இப்பிரச்சினைக் குறித்து விரிவாக ஒரு கட்டுரை எழுதியுள்ளார். அதில் "பூட்டான் நாட்டின் ஒரு பகுதியை (டோக்லாம் பீடபூமி) சீனா உரிமை கோருவதுதான் பிரச்னை" என்று குறிப்பிடுகிறார்.

சீனா உரிமை கோரும் தனது நாட்டிற்குட்பட்ட பகுதியை மீட்பதில் பூட்டான் பெரிய ஆர்வமும் காட்டவில்லை. பூட்டான் எல்லைக்குட்பட்ட அந்த 'டோக்லாம்' பகுதியில் சீன மேய்ச்சல்காரர்கள் பல ஆண்டுகாலமாக தங்கள் கால்நடைகளை மேய்ச்சலுக்கு கொண்டு வருவதாகவும் பூட்டான் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என்றும் எம்.கே.நாராயணன் எழுதுகிறார்.

இந்தியா – பூட்டான் – சீனா மூன்றும் அருகருகே இருக்கும் நாடுகள் என்பதால், இந்த மூன்று நாடுகளின் 'சந்திப்பு முனை' எது என்பதில்தான் இப்போது பிரச்சினை. இந்த சந்திப்பு முனை பட்டாங்லா எனும் இடம் என்பது இந்தியாவின் நிலை. இல்லை; இல்லை; இந்த சந்திப்பு முனை 'கிப்மோச்சி' மலைக்கு அருகில் உள்ளது என்பது சீனாவின் நிலை. பூடான் – இரு தரப்பையும் உறுதியாக எதிர்க்கவில்லை. ஆனால் மூன்று நாடுகளின் சந்திப்பு முனை – தனது நாட்டுக்குள் இருக்கும் 'டோக்லாம்' பகுதி தான் என்ற நிலை எடுத்திருக்கிறது பூடான்.

பூடானும் இந்தியாவும் 2007இல் நட்புறவு ஒப்பந்தம் போட்டுக் கொண்டன. அதே நேரத்தில் சீனாவுடனும் பூடான் சமரச பேச்சுகளை நடத்திக் கொண்டிருக்கிறது. பூட்டானின் டோக்லாம் பகுதியில் சீனா 2007ஆம் ஆண்டே சாலைகள் போடத் தொடங்கிவிட்டது. இந்த நிலையில் இப்போது, இந்திய இராணுவம் பூட்டானுக்கு சொந்தமான டோக்லாம் பகுதிக்குள் நுழைந்திருக்கிறது. இந்த விவரங்களை வெளியிட்டுள்ள எம்.கே.நாராயணன், தனது கட்டுரையில் மற்றொரு முக்கிய கருத்தை சுட்டிக்காட்டுகிறார்:

"பேச்சு வார்த்தைகள் நடக்க வேண்டுமானால் இந்தியா தனது படைகளை இந்திய எல்லைப் பகுதியை நோக்கி பின்னோக்கி நகர்த்த வேண்டும். **இந்திய எல்லைக்கு இந்தியப் படை திரும்பாவிட்டால்** கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும் – என்று சீனா எச்சரிக்கிறது" என்று குறிப்பிடுகிறார், எம்.கே. நாராயணன்.

இந்திய இராணுவம் தனது எல்லையைத் தாண்டி பூட்டானுக்கு உரிய டோக்லாம் பகுதியில் ஆக்கிரமித்து நிற்கிறது என்று இந்தக் கட்டுரை உறுதி செய்கிறது.

'பூட்டான்' பிரதேசத்தில் அடங்கியுள்ள ஒரு பகுதிக்கு இந்தியாவும் சீனாவும் சொந்தம் கொண்டாடுவதே இப்போது பிரச்சினை!

முறையாக பேச்சுவார்த்தை நடத்தி சமுகமாக தீர்த்துக் கொள்ளுங்கள். போர் தீர்வு அல்ல என்று எச்சரிக்கிறார் எம்.கே.நாராயணன். இதே கருத்தை வேறு அமைப்புகள், இயக்கங்கள் கூறியிருந்தால், "பார் பார் தேச விரோதிகள்" என்று பாய்ந்திருப்பார்கள்.

எழுதியவர் எம்.கே. நாராயணன் என்ற பார்ப்பனர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர்; ஆளுநர் என்ற உயர் பதவிகளை வகித்தவர். அதேபோல் இந்திய இராணுவத்துக்கு ஆயுத பலம் இல்லை என்று பகிரங்கமாக அறிக்கை சமர்ப்பித்திருக்கும் கணக்கு மற்றும் தணிக்கைக் குழு அதிகாரிகளும் பார்ப்பனர்கள்தான்.

இந்தியாவின் 'தேச பக்தி'யை கேள்வி கேட்கவும் 'அவாள்'களால்தான் முடியும். 'தேச பக்தி' பெருமை பேசவும் 'அவாள்களுக்கு' மட்டுமே உரிமை உண்டு. 'யார் தேச விரோதி' என்பதை முடிவு செய்வதும் 'அவாள்' தான்.

பார்ப்பனரல்லாத எவரும் இந்தப் பிரச்சினைகளிடம் நெருங்கவே முடியாது.

இதுதான் 'பார்ப்பன பாரதத்தின்' நிலை! 'பாரத மாதா'வை தனது பூணூல் வளையத்துக்குள் கட்டிப் போட்டு வைத்திருக்கிறார்கள் தேச பக்த கொழுந்துகள்.

அதிகாரம் யாரிடம் இருக்கிறது என்பது இப்போது புரிகிறதா?


– **'இரா'**

# கதிராமங்கலம் மக்களுக்கு ஆதரவாக பள்ளிப்பாளையத்தில் கழகம் ஆர்ப்பாட்டம்



கதிராமங்கலத்தில், இயற்கை எரிவாயு மற்றும் கச்சா எண்ணெய் எடுக்கும் திட்டத்தை எதிர்த்துப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பொதுமக்களுக்கு ஆதரவாக, பள்ளிப்பாளையம் நகர திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் 17.07.2017 அன்று மாலை 5:00 மணிக்கு பேருந்து நிலையம் அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கதிராமங்கலத்தில் இருந்து ஓ.என்.ஜி.சி. நிறுவனத்தை உடனே வெளியேற்று, ஓ.என்.ஜி.சி. க்கு எதிராக போராடிய மக்கள் மீது போடப்பட்ட பொய் வழக்குகளை திரும்பபெறு, பொய் வழக்கில் கைது செய்து சிறையிலடைக்கப்பட்ட அனைவரையும் உடனடியாக விடுதலை செய் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி இந்தப் போராட்டம் நடைபெற்றது. நாமக்கல் மாவட்ட செயலாளர் மு.சரவணன் தலைமை வகித்தார். மாவட்டத் தலைவர் மு.சாமிநாதன், மாவட்ட அமைப்பாளர் மா.வைரவேல், மாவட்ட பொருளாளர் அ.முத்துப்பாண்டி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கழகத்தின் பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன், அமைப்புச் செயலாளர் ப.இரத்தினசாமி சிறப்புரையாற்றினர். இந்த ஆர்ப்பாட்டத்தில் பள்ளிப்பாளையம், திருச்செங்கோடு, குமாரபாளையம் பகுதி பொறுப்பாளர்கள் மற்றும் தோழர்கள் பங்கேற்றனர்

# மயிலைப் பகுதி கழகத் தோழர்களின் சீரிய மக்கள் பணி



திராவிடர் விடுதலைக் கழகத்தின் சென்னை மயிலாப்பூர் பகுதி தோழர்கள் 21.07.2017 அன்று விசாலாட்சி தோட்டம், பல்லக்கு நகர் போன்ற பகுதிகளில் குடிதண்ணீர் வராத காரணத்தால் மக்கள் பெரும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர். அந்த பகுதி மக்களின் பிரச்சனையை கருத்தில் கொண்டு பொது மக்களிடம் கையொப்பம் வாங்கி மயிலாப்பூர் பகுதி கழகத் தலைவர் இராவணன் தலைமையில் அந்த பகுதியின் "சென்னை குடிநீர் வாரியம்" ஆய்வாளரை சந்தித்து தண்ணீர் பற்றாக்குறையை தீர்க்க வழிவகை செய்ய வேண்டி கோரிக்கை மனுவை அளித்தனர்.

அதைத் தொடர்ந்து, மயிலாப்பூர் பகுதியில் அரசாங்கத்தால் வழங்கப் படும் ஜாதி சான்றிதழ், வருமான சான்றிதழ் போன்ற சான்றிதழ்களை பெற வரும் பொதுமக்களிடம் இடைத் தரகர்கள் பணம் பெறும் நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியும், பொது மக்களுக்கு இடையூறான வேலையில் ஈடுபடும் நபர்களை தடுக்கக் கோரியும் பொது மக்களுக்கு வழங்கப்படும் சான்றிதழ்கள் அரசு அலுவலர்களே முறையாக வழங்க ஏற்பாடு செய்ய வேண்டி மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் மாவட்ட துணை தாசில்தாரை சந்தித்து தோழர்கள் மனுவை கொடுத்தனர்.

அதன் பின்பு, மந்தைவெளி முதல் பட்டினம்பாக்கம் வழியாக பிராட்வே செல்லும் மாநகர பேருந்து (21N) சமீபகாலமாக இயங்கவில்லை. அந்த வரிசை கொண்ட மாநகர பேருந்து களை மீண்டும் இயக்கக் கோரி மந்தவெளி பணிமனையில் தோழர்கள் மனு கொடுத்து தக்க நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியுள்ளனர்.

# கர்நாடக அரசு தனிக்கொடி உருவாக்குகிறது

இந்தித் திணிப்பை எதிர்த்து வரும் கர்நாடக அரசு இப்போது கருநாடக மாநிலத்துக்கு தனிக் கொடியை உருவாக்க குழு ஒன்றை உருவாக்கியிருக்கிறது. தேசியக் கொடி இருக்கும்போது மாநிலக் கொடியை உருவாக்குவது தேச விரோதம் என்கிறது பா.ஜ.க. மாட்டிறைச்சித் தடையை எதிர்த்து கொதித்துப் போயிருக்கும் கேரளாவிலிருந்து 'திராவிட நாடு' கோரிக்கையை வலியுறுத்தும் கருத்துகள் முகநூலில் வலம் வருகின்றன.

தமிழ்நாட்டில் கலைஞர் ஆட்சியில் மாநகர காவல் துறைக்கு தனிக்கொடி உருவாக்கப்பட்டு, சில நாள் காவல்துறை வாகனங்களில் பறந்தது. 'தேச பக்தர்கள்' எதிர்ப்பைத் தொடர்ந்து அந்த முயற்சி கைவிடப்பட்டது.

# காமராசர் உயிருக்கு குறி வைத்த பார்ப்பனர்கள்

*(முதல் பக்கத் தொடர்ச்சி)*

*நேரடியாகவே போய் சந்தித்து, தனது செல்வாக்கைப் பயன்படுத்தி தமிழ் மாகாண காங்கிரஸ் கமிட்டியில் உறுப்பினராகி விடுகிறார். காமராசருக்கு தெரியாமலேயே இவ்வளவும் நடக்கிறது. திருச்செங்கோட்டில் மாவட்ட காங்கிரஸ், ராஜாஜி காங்கிரசில் இணைவதை வரவேற்று தீர்மானம் போட்டது. திருப்பரங்குன்றத்தில் காமராசர் தலைமையில் மாநில காங்கிரஸ் கூடி, ராஜாஜி மாகாண காங்கிரஸ் உறுப்பினரானதை இரத்து செய்தது. இறுதியில் அகில இந்திய காங்கிரஸ் தலைமை தனது முடிவையே மறு உறுதி செய்தது. அப்போதுதான் அண்ணா எழுதினார், "கோடு உயர்ந்தது; குன்றம் தாழ்ந்தது; கலங்காதீர் காமராசரே, கருஞ்சட்டைப் படை உமது கண்ணீரைத் துடைக்கும்" என்று. இது வரலாறு.*

*காமராசர் முதலமைச்சராக வந்தவுடன், அவர் உருவாக்கிய அமைச்சரவையில் ஒரு பார்ப்பனர் கூட இடம் பெறவில்லை. பின்னாளில்தான் ஆர்.வெங்கட்ராமன் அமைச்சராக்கப்பட்டார். முதலமைச்சராக இருப்பவர்கள்தான் உள்துறையை தங்களிடம் வைத்திருப்பார்கள். ஆனால் காமராசர் உள்துறையை கக்கன் என்ற தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலிருந்து வந்த தலைவரிடம் ஒப்படைத்தார். அறநிலையத் துறைக்கு பி.ஆர். பரமேசுவரன் என்ற தாழ்த்தப்பட்டவரை நியமித்தார். அதற்கு முன் இருந்த ராஜாஜி அமைச்சரவையில் 5 பார்ப்பனர்கள் இடம் பெற்றிருந்தார்கள். 205 சட்டமன்ற உறுப்பினர்களில் 8 பார்ப்பனர்களுக்கு மட்டுமே போட்டியிட வாய்ப்பளித்தார். இதைப் பாராட்டிய பெரியார், "நானாக இருந்தால்கூட 20 பார்ப்பனருக்கு வாய்ப்பளித்திருப்பேன். காமராசர் மிஞ்சி விட்டார்" என்று எழுதினார். உயர் பதவிகளில் தமிழர்களே நிரம்பி வழிந்தனர். நெ.து. சுந்தர வடிவேலு, கல்வித் துறை இயக்குனராக்கப்பட்டார். அவரைவிட சிறந்த கல்வி பெற்று அமெரிக்காவிலே ஆராய்ச்சியாளராக இருந்தவரை அவர் காமராசரின் ஜாதிக்காரராக இருப்பதாலும் அவரை கல்வி அதிகாரியாக்கலாம் என்று கூறப்பட்ட போது காமராசர் அதை ஏற்க மறுத்து நெ.து.சு. அவர்களையே கல்வித் துறைக்கு அதிகாரியாக நியமித்தார்.*

*ஒரு சம்பவத்தை குறிப்பிட வேண்டும்:*

*ஒரு அதிகாரிக்கு நியாயமாக கிடைக்க வேண்டிய பதவி உயர்வு கிடைக்காத நிலையில் அவருக்காக வ.உ.சிதம்பரனாரின் மகன், வ.உ.சுப்ரமணியம் காமராசரிடம் பரிந்துரைக்கு வந்தார். அதிகாரியின் பெயர் கிறிஸ்துவத்தைச் சார்ந்ததாக இருந்ததால் அதன் காரணமாக அவரது பதவி உயர்வு தடுக்கப் பட்டிருக்கலாம் என்று கருதிய வ.உ.சுப்பிரமணியம், அவர் கிறிஸ்தவராக இருந்தாலும் நாடார் சமூகம் என்று கூறியபோது காமராசருக்கு கோபம் வந்துவிட்டது. 'ஜாதிக்காரன்னு எல்லாம் சொல்லிக்கிட்டு வராதே; போ' என்று கூறி திருப்பி அனுப்பிவிட்டார். ஜாதியைக் கூறியதாலேயே அந்த அதிகாரிக்கு நியாயமாக கிடைக்க வேண்டிய பதவி உயர்வு 6 மாதம் தள்ளி போடப்பட்டது காமராசர் ஆட்சியில்!*

*ராஜாஜி இறந்தபோது பெரியார் அவரது இறுதி நிகழ்வுக்குச் சென்றதை எல்லோரும் குறிப்பிடு வார்கள். அண்ணா சிகிச்சைக்காக அமெரிக்கா சென்றபோது அங்கே அதிபராக இருந்த நிக்சனை, முதலமைச்சர் என்ற முறையில் சந்திக்க விரும்பினார். ஆனால், நிக்சன் சந்திக்க மறுத்தார். பிறகு காமராசர் அகில இந்திய காங்கிரஸ் தலைவராக இருந்தபோது இந்தியா வந்த நிக்சன், காமராசரை சந்திக்க விரும்பினார். காமராசர், "எங்கள் மாநில முதல்வரையே சந்திக்க மறுத்த உங்களை நான் சந்திக்கத் தயாரில்லை" என்று மறுத்து விட்டார். (கைதட்டல்)*

*காமராசர் நடத்திய ஆட்சி பெரியார் கொள்கை களின் ஆட்சியாகவே இருந்தது. அதன் காரணமாகத் தான் ராஜாஜியே காமராசர் ஆட்சியை 'தெய்வத்தை ஒதுக்கிவிட்ட ஆட்சி' என்ற தலைப்பிட்டு 'கல்கி' பத்திரிகையில் 8.12.1961இல் தலையங்கம் எழுதினார். காமராசர் மீது பார்ப்பனர்களுக்கு அவர் பெரியார் வழியில் செல்கிறார் என்பதால் அவ்வளவு கோபம்!*

*அதற்குப் பிறகு 20 நாள் கழித்து ராஜபாளையத் தில் டிசம்பர் 31இல் காமராசர் இவ்வாறு பேசினார்:*

*"ஏழைகளை வாழ வைப்பது சிலருக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் ஒரு வேளையாவது நல்லபடி சாப்பிட வகை செய்ய வேண்டாமா? படிக்க வழி செய்ய வேண்டாமா? இதைச் செய்தால் காங்கிரஸ் ஒழியணும் என்கிறார்கள். மரம் வளர்த்தவன் தண்ணீர் விடுவானாம்! இது தர்மமாம்; ஏழைகளை ஆண்டவன் காப்பாற்றுவான் என்கிறார்கள். மரம் வைத்தவனும் தண்ணீர் ஊற்றவில்லை; மற்றவர்களும் ஊற்றவில்லை. அதைப் பார்த்த பிறகுதான் ஏழைகளுக்கு சர்க்கார்தான் வசதி செய்ய வேண்டும் என்கிறேன்" என்று பேசினார். ராஜாஜிக்கு காமராசர் மீது ஆத்திரம் வந்தது ஏன் என்பது இப்போது புரியும்.*

*சென்னை திருவான்மியூரில் சலவைத் தொழிலாளர் மாநாடு ஒன்று நடந்தது; மாநாட்டில் பேசிய ராஜாஜி, "நீங்கள் உங்களது தொழிலை மேலும் சிறப்பாக செய்வது எப்படி என்பதில் கவனம் செலுத்தி முன்னேற வேண்டும்; எல்லோரும் படிக்க வந்து விட்டால் பிறகு உங்கள் தொழிலை யார் செய்வது?" என்று கேட்டார். குழந்தைகளுக்கு எல்லாம் காமராசர் என்று பெயர் சூட்டினார். 'பெயர் சூட்டுவதற்கு பெரியார் ஒரு ரூபாய் கேட்பார். இன்னும் ஒரு ரூபாய் கூடுதலாகக் கொடுத்தால் நல்ல பெயர் சூட்டுவேன்' என்று கூறி, அந்தக் குழந்தைக்கு 'காமராசர்' என்று பெயர் சூட்டுவார்.*

*1967 தேர்தலில் காமராசர் தோல்வி அடைந்து விட்டார். தி.மு.க. ஆட்சிக்கு வந்து விட்டது. பெரியார் தி.மு.க.வை ஆதரிக்கத் தொடங்கிவிட்டார். அதற்குப் பிறகு 11.1.1968இல் 'விடுதலை'யில் வெளியிட்ட அறிக்கையில் "கல்வி சம்பந்தப்பட்ட வரையில் எந்த நிகழ்ச்சி ஆரம்பித்தாலும் கடவுள் வாழ்த்துச் சொல்வதை நிறுத்திவிட்டுக் காமராசர் வாழ்த்துக் கூற வேண்டும்" என்று எழுதினார். இங்கேகூட அந்த வாசகத்தை காமராசர் படத்துக்குக் கீழே நமது தோழர்கள் பதிவு செய்திருக்கிறார்கள்.*

*1969ல் நாகர்கோயில் நாடாளுமன்ற இடைத் தேர்தலில் காமராசர் போட்டியிட்டபோது பெரியார் காமராசரையே ஆதரிக்க வேண்டும் என்று எழுதினார். தி.மு.க. தனது ஆதரவு வேட்பாளரை காமராசருக்கு எதிராக நிறுத்தியதை பெரியார் குறை கூறினார். தி.மு.க.வை ஆதரிக்கிறோம் என்பதற்காக தி.மு.க. கூட்டணி வேட்பாளர்களை எல்லாம் ஆதரிக்க வேண்டும் என்று பெரியார் கருதவில்லை. காமராசர் தொண்டின் மீது பெரியாருக்கு அவ்வளவு பற்றும் ஈடுபாடும் இருந்தது.*

*தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு அண்ணா உடல்நலமின்றி அமெரிக்காவுக்கு சிகிச்சைக்கு சென்றபோது காமராசர் அண்ணாவிடம் கூறினார், "நீங்கள் நலம் பெற்று திரும்பி வரும்வரை எங்கள் கட்சி உங்கள் ஆட்சிக்கு எந்த இடையூறும் செய்யாது" என்று கூறினார். "தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகுகூட 6 மாதங்கள் வரை ஆட்சியின் மீது எந்த விமர்சனமும் வேண்டாம் அவகாசம் தருவோம்" என்று காமராசர் கூறினார். அத்தகைய உயரிய பண்பாடு அன்று அரசியலில் இருந்தது.*

*பசுவதைத் தடைச் சட்டம் கொண்டுவரக் கோரி காமராசரைக் கொல்ல ஆர்.எஸ்.எஸ். நிர்வாண சாதுக்கள் டெல்லியில் நடத்திய கொலை வெறியாட்டம் குறித்து பொதுச் செயலாளர் விளக்கினார். முதலில் பூரி சங்கராச்சாரி, டெல்லியில் பசுவதை தடைச் சட்டம் கோரி உண்ணாவிரதத்தைத் தொடங்கினார். 1966 நவம்பர் 7ஆம் தேதி காமராசர் வீட்டுக்கு தீ வைத்து வெறியாட்டம் போட்டார்கள். அதற்கு 3 நாட்களுக்கு முன் டெல்லியில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் இந்தப் போராட்டம் குறித்து பேசப்பட்டது. காமராசர் அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர். அப்போது காமராசர் கூறினார், "இவர்கள் டெல்லியில் ஏன் போராட்டம் நடத்துகிறார்கள்; சென்னையில் போய் நடத்த வேண்டியதுதானே?" என்று பேசியிருக்கிறார். "இவர்களுக்கு தைரியம் இருந்தால் சென்னையில் போய் நடத்தட்டும்; பெரியார் பார்த்துக் கொள்வார்" என்று கூறியவர் காமராசர். (கைதட்டல்)*

*ராஜாஜி 1966 பிப்.7ஆம் தேதி சென்னை கடற்கரையில் பேசும்போது, "தமிழ்நாட்டிலிருந்து சென்றுள்ள கருப்பு காக்கையை கல்லால் அடித்து வீழ்த்தினால் மற்ற காக்கைகள் தானே பறந்து ஓடிவிடும்" என்று காமராசரை கருப்புக் காக்கை என்று குறி வைத்துப் பேசினார்.*

*டெல்லியில் காமராசர் வீடு தாக்கப்பட்ட அடுத்த 5 நாள்களில் காமராசருக்கு மிரட்டல் கடிதங்கள் வந்தன. "பசுவதை எதிர்ப்புப் போராட்டத்தின்போது எப்படியோ தப்பிவிட்டாய். ஆனால் நீ இனி உயிருடன் வெகு நாள்கள் இருக்க முடியாது" என்று அந்த மிரட்டல் கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது. 'சுதேசமித்திரன்', 'மெயில்' ஏடுகள் 13.11.1966 அன்று இந்தச் செய்தியை வெளியிட்டிருந்தன. ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் அதிகாரப்பூர்வ ஏடான 'ஆர்கனைசர்' 1.11.1966 அன்று வெளியிட்ட 'தீபாவளி' சிறப்பு இதழில் இவ்வாறு எழுதியது.*

*"அடுத்த 3 மாதங்களில் ஏதாவதொரு மிகப் பெரிய தேசிய நஷ்டம் ஏற்படலாம். தலைசிறந்த அரசியல் தலைவர் ஒருவரோ மாநில ஆட்சித் தலைவர் ஒருவரோ திடீரென மறைய (சாக) நேரலாம் எனத் தோன்றுகிறது. அல்லது விபத்தின் விளைவாக நாட்டின் மிகப் பெரும் தலைவர் ஒருவர் மரணமடைவார்" என்று எழுதியது.*

*ஆக, காமராசர் உயிருக்கு குறி வைத்து பார்ப்பன சதிவலை ஒன்று பின்னப்பட்டது. பெரியார் இதையெல்லாம் தொகுத்து, 'காமராசர் கொலை முயற்சி சரித்திரம்' என்ற நூலை வெளியிட்டார். காங்கிரசுக்காரர்கள் காமராசர் விழா என்ற பெயரில் அவரது படத்துக்கு மாலை போட்டுக் கொண்டிருப் பார்கள். பெரியார் மாறாக அவரது சாதனைகளை அவருக்கு உருவான பார்ப்பன எதிர்ப்புகளை பேசினார், எழுதினார். நூல்களாக்கி பரப்பினார்.*

*காமராசர், அகில இந்திய கட்சியில் இருந்தாலும் அவர் தமிழராக அதுவும் உணர்வுள்ள தமிழராக ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளைக் காக்கும் தமிழராக இருந்தார். இங்கே பேசிய பழ. கருப்பையா அ வர்கள் கூறியதுபோல், "காமராசர் திராவிட இயக்கத்தின் பிள்ளை" தான். இந்த வரலாறுகளை நாம் மக்களிடம் கொண்டு செல்ல இத்தகைய விழாக்களைப் பயன்படுத்துவோம்" என்றார் கழகத் தலைவர் கொளத்தூர் மணி.*

**தொகுப்பு : 'இரா'**

## 'தமிழில் தலைமை உரையாற்றிய முதல் தலைவர்'

*காமராசர், அகில இந்திய கட்சியான காங்கிரசில் இருந்தாலும் தமிழ் உணர்வை விட்டுத் தராத தலைவர். மொரார்ஜி பிரதமராக இருந்தபோது, கேரள முதல்வர் ஈ.கே.நயினாருக்கு இந்தியில் ஒரு கடிதம் எழுதினார். அதற்கு ஈ.கே. நயினார், மலையாளத்தில் பதில் எழுதினார். 'மொரார்ஜி என்ன இது? மலையாளத்தில் எழுதினால் எப்படி புரியும்' என்றார். 'நீங்கள் இந்தியில் எழுதியது எனக்குப் புரியவில்லையே' என்றார் ஈ.கே.நயினார்.*

*காமராசர் காங்கிரஸ் தலைவராக இருந்தபோது அனைத்து இந்திய இளைஞர் காங்கிரஸ் மாநாடு நடந்தது. மாநாட்டில் வடநாட்டு பிரநிதிகள் இந்தியில் பேசினார்கள். கருநாடகத்தைச் சார்ந்த குண்டுராவ், தனது தாய்மொழியான கன்னடத்தில் பேசினார். அடுத்து தமிழ்நாட்டுப் பிரதிநிதியாகச் சென்ற குமரி அனந்தன் தமிழில் பேசினார். கமிட்டியில் இது பிரச்சினையானது. காமராசரிடம் இந்தப் பிரச்சினை வந்தபோது, பழ. நெடுமாறனை அழைத்து என்ன நடந்தது என்று கேட்டார். பழ. நெடுமாறன் நடந்ததைக் கூறினார். 'நீ செய்ததுதான் சரி; சரியாகச் செய்தாய்' என்றார் காமராசர். இதை பழ.நெடுமாறன் தனது நூலில் பதிவு செய்துள்ளார்.*

*காமராசருக்கு ஆங்கிலம் நன்றாகத் தெரியும். ஆங்கிலத்தில் பேசக் கூடியவர். மற்றவர்கள் கூறுவதுபோல் ஆங்கிலம் தெரியாதவர் அல்ல. அகில இந்திய காங்கிரஸ் தலைவராக அவர் இருந்தபோது, புவனேசுவரில் காங்கிரஸ் மாநாடு நடந்தது. 'எனது தலைமை உரையை எனது தாய்மொழியால் நிகழ்த்துவேன். தேவைப்பட்டால் மொழி பெயர்ப்பாளரை வைத்துக் கொள்ளுங்கள்' என்று நேருவிடம் கூறி விட்டார். அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டில் முதன்முதலாக தமிழில் தலைமை உரை நிகழ்த்திய பெருமை காமராசருக்குத்தான் உண்டு. (கைதட்டல்)*

*சேலத்தில் காமராசர் மீது மிகவும் பற்றுள்ள ஒரு பொறியாளர் எனக்கு நண்பர். அவர் அரசு அதிகாரியாக இருந்தாலும் காமராசரிடம் நெருக்கமாக இருந்தவர். 1967 தேர்தலில் காங்கிரஸ் தோல்விக்குப் பிறகு அவரிடம், காமராசர் தமிழக அரசியலில் மிகப் பெரிய அறிவாளி யார்? என்று கேட்டாராம். அதற்கு காமராசரே விடையும் கூறினார். பெரியார் தான் மிகச் சிறந்த அறிவாளி. நான் அகில இந்திய அரசியலுக்குப் போனபோது 'தற்கொலை முயற்சி என்று பெரியார் தந்தி கொடுத்து எச்சரித்த அறிவாளி' என்று காமராசர் கூறியதாக என்னிடம் கூறினார்.*

**– கொளத்தூர் மணி உரையிலிருந்து**

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM. REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# இழந்துவரும் உரிமைகளை மீட்போம் ! தமிழகத்தின் தனித்தன்மை காப்போம் !

# சமூகநீதி-சமத்துவ பரப்புரைப் பயணம்

‘வந்தாரை வாழ வைக்கும் தமிழ்நாடு’ என்று பெருமைக்குரியவர்களாக இருந்த நாம் - இன்று வாழ்வுரிமை இழந்து நிற்கிறோம். காலம் காலமாக நமது முன்னோடித் தலைவர்கள் பெரியாரும் காமராசரும் அண்ணாவும் அவர் வழி வந்த தலைவர்களும் கட்டிக் காத்த தமிழ்நாட்டின் தனிச் சிறப்புகளை நடுவண் பா.ஜ.க. மோடி ஆட்சியிடம் பறிகொடுத்துவிட்டு நிற்கிறோம்.

நமது தனித்துவத்தை அழிக்கிறார்கள்; இந்தியப் பண்பாட்டை - பார்ப்பனியப் பண்பாட்டைத் திணிக்கிறார்கள்; நாம் இழந்து நிற்கும் உரிமைகளில் சூழ்ந்து நிற்கும் ஆபத்துகளில் ஒரு சிலவற்றை மட்டும் உங்கள் சிந்தனைக்குக் கொண்டு வருகிறோம்.

- 2006ஆம் ஆண்டிலேயே நுழைவுத் தேர்வை நாம் ஒழித்து விட்டோம்; பிளஸ் டூ மதிப்பெண் அடிப்படையில் மட்டும் மருத்துவக் கல்லூரியில் நமது மாணவ மாணவிகளை சேர்த்தோம்; கடும் உழைப்பால் நல்ல மதிப்பெண் எடுத்துக்கூட நமது வீட்டுச் செல்வங்கள் மருத்துவக் கல்லூரியில் சேர முடியவில்லை. ‘நீட்’ தேர்வை எழுது என்று கட்டாயப்படுத்துகிறது மோடி ஆட்சி. திக்கு தெரியாத காட்டில் விழி பிதுங்கி நிற்கிறார்கள் நம் வீட்டுக் குழந்தைகள்.
- விரும்பும் மொழியை எவரும் படிக்கலாம். அது தனிப்பட்ட விருப்பம். ஆனால் தமிழ்நாடு அரசு இந்தியை ஏற்றுக் கொண்டுதான் இந்தியாவில் இருக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்துவது ஒரு இனத்தின் மொழி உரிமையை மறுத்து மாற்று மொழியை மாற்றுப் பண்பாட்டைத் திணிப்பது அல்லவா?
- மைல் கற்களிலும், மத்திய அரசு அலுவலகங்களிலும் தொலைக்காட்சி மற்றும் வானொலிகளிலும் தமிழகத்தில் செயல்படும் மத்திய அரசு அலுவலகங்களிலும் இந்தியை வேகம் வேகமாக திணிக்கிறார்கள்.
- தொடர்வண்டி டிக்கட் பரிசோதகர்களாக இந்திக் காரர்கள் வந்து விட்டார்கள். வருமானவரித் துறை, சுங்கத் துறை, அஞ்சல் துறை, கடவுச் சீட்டுத் துறை என்று தமிழ்நாட்டின் மத்திய அரசு அலுவலகங்களிலும் பொதுத் துறை நிறுவனங்களிலும் இந்தி பேசுகிறவர்களே அதிகாரிகளாக குவிக்கப்படுகிறார்கள்.
- இந்தியா முழுவதிலும் சுமார் 10,000 பார்ப்பனர்கள் மட்டுமே பேசுவதாகக் கூறப்படும் ‘சமஸ்கிருதத்தை’ ‘தெய்வீக மொழி’ என்றும், அதில் தான் பாரதப் பண்பாடே அடங்கியிருக்கிறது என்றும் கூறி, கோடிக் கோடியாக பணத்தை வாரி இரைத்து அந்தப் பண்பாட்டை தமிழ்மொழி பேசும் தமிழர்கள் மீது திணிக்கிறார்கள். இது பார்ப்பனப் பண்பாட்டுப் படையெடுப்பு அல்லவா?
- நமது விவசாயம் நலிந்து போய் விவசாயிகள் தற்கொலை செய்து



மடிகிறார்கள். விவசாயக் கடன்களை தள்ளுபடி செய்து விவசாயிகளை வாழ விடுங்கள் என்று நமது விவசாயிகள் டெல்லிக்குப் போய் ஆடையின்றிப் போராடியும் அவர்களை திரும்பிப் பார்க்கவே மறுக்கிறது மோடி ஆட்சி. கடந்த 3 ஆண்டுகளில் பெரும் கார்ப்பரேட் நிறுவனங்கள் பொதுத் துறை வங்கிகளில் கடனாகப் பெற்று திருப்பி செலுத்தாத தொகை மட்டும் ரூ.6.8 இலட்சம் கோடி. நமது விவசாயிகள் தள்ளுபடி செய்யக் கோரும் கடன் தொகை ரூ.79 ஆயிரம் கோடி. ஆனால் மோடிக்கு நெருக்கமான பெரும் தொழிலதிபர் அதானி வங்கிக்கு தர வேண்டிய கடன் தொகை மட்டும் 72 ஆயிரம் கோடி. தெரியுமா உங்களுக்கு? அவருக்கு சொந்தமான விமானத்தில்தான் மோடி உலகம் முழுதும் சுற்றி வருகிறார்.

- இறைச்சிக்கு ஆடு, மாடு, கோழிகளை வெட்டலாம் என்று சட்டம் அனுமதிக்கிறது. ஆனால் மாடுகளை இறைச்சிக்காகக்கூட வெட்டக் கூடாது என்று சட்டம் போட்டு விவசாயத் தொழிலாளர்கள், மாட்டு வியாபாரிகள், இறைச்சிக் கடைக்காரர்கள், தோல் தொழில் செய்வோர், பால் விற்பனையாளர்கள், குறைந்த விலையில் கிடைக்கும் புரதச் சத்தான மாட்டிறைச்சி உண்போர் வயிற்றில் அடித்து விட்டார்கள். பால் வற்றிப் போன மாடுகளை எவ்விதப் பயனும் இன்றி ஒவ்வொரு நாளும் ‘தீவனம்’ போட்டுக் காப்பாற்ற ஏழை விவசாயிகளால் முடியுமா?
- மீத்தேன்-ஹைடிரோ கார்பன் எடுப்பதாக பூமிக்கடியில் ஆழமாக துளை போடுகிறது ‘ஓ.என்.ஜி.சி.’ நிறுவனம். நீர் ஆதாரங்களைப் பாதித்து விளை நிலங்களை ‘காயடிக்கும்’ இந்த ஆபத்தான திட்டங்களை நிறுத்து என்று நெடுவாசலிலும் கதிராமங்கலத்திலும் போராடுகிறார்கள் நமது மக்கள் ‘நீ யார் கேட்பதற்கு? நாங்கள் அப்படித்தான் எடுப்போம்’ என்று இறுமாப்பு பேசுகிறது மோடி ஆட்சி.
- தமிழர்களின் சங்ககால வாழ்வியலில் ஜாதி, மத அடையாளம் ஏதுமில்லை என்பதை உறுதிப்படுத்தும் சான்றுகள் ஏராளமாகக் கிடைத்து வரும் ‘கீழடி’ அகழ்வாராய்ச்சியை முடக்கத் துடிக்கிறார்கள். வேதப் பார்ப்பனப் பண்பாடு அல்ல - தமிழர் பண்பாடு என்ற உண்மை வெளிவந்துவிடுமே என்ற பதைபதைப்பே அதற்குக் காரணம்.
- இப்போது வந்திருக்கும் ‘சரக்கு மற்றும் சேவை வரி’ - சிறு தொழில் நடத்துவோர் நடுத்தர மக்கள், வணிகர்கள் கழுத்தை நெறிக்கிறது. அம்பானிகளும் அதானிகளும் கும்மாளம் போட்டு வரவேற்கிறார்கள். திருப்பூரில் ‘ஜாப் ஓர்க்’ எடுத்து பிழைத்து வந்த 7 இலட்சம் குடும்பங்கள் வீதிக்கு வந்து விட்டன. ஒரு கோடி ரூபாய்க்கு மேல் விற்கும் சொகுசு கார்களின் விலை மட்டும் பல இலட்சம் குறைந்து விட்டது. அடுத்த சில மாதங்களில் இன்னும் நெருக்கடிகள் காத்திருக்கின்றன.
- நினைவிருக்கிறதா? 500, 1000 ரூபாய் நோட்டுகள் செல்லாது என்று ஒரே இரவில் அறிவித்துவிட்டு, மாதக் கணக்கில் நம்மை எல்லாம் வங்கி வாசல்களில் சொந்தப் பணத்தை எடுக்க மணிக்கணக்கில் கியூவில் நிற்க வைத்தார் மோடி! கண்ட பலன் என்ன? கறுப்புப் பணம் வெளியே வந்ததா? பொருளாதார நெருக்கடி தீர்ந்ததா? ஒன்றும் இல்லை. இதனால் 15 இலட்சம் பேர் வேலை இழப்புக்கு ஆளானார்கள் என்று புள்ளி விவரம் கூறுகிறது. கறுப்புப் பணப் புள்ளிகள் பத்திரமாக பணத்தை மாற்றிக் கொண்டு விட்டார்கள்.
- இவை மட்டுமா? தமிழ்நாட்டில் ‘ஜாதி வெறியைத் தூண்டிவிட்டு ஜாதித் தலைவர்களைப் பயன்படுத்தி ‘இந்துத்துவா’ வலைக்குள் இழுக்கும் முயற்சிகள் தொடங்கிவிட்டன. இந்த சதி வலையில் நாம் சிக்கி விட்டால் - பிறகு தமிழ்நாடு ஜாதி வெறிக்களமாகி இந்துத்துவ நாடாக்கி விட முடியும் என்பதே ‘அவாள்’ போடும் கணக்கு.
- *தமிழர்களே! இந்த சூழ்ச்சி வலையில் நாம் சிக்கி விடக் கூடாது!*
- *காலம் காலமாக கட்டிக் காத்த தமிழகத்தின் தனித்துவத்தைக் காப்போம்!*
- *தமிழர்களைக் கூறு போடும் ஜாதியத்தை விட்டொழிப்போம்!*
- *சமத்துவமும் சமூக நீதியுமே நமக்கான பண்பாடு;*
- *மதக் கலவரங்களற்ற வாழ்வியலே நமது அறம்;*
- *வெறுப்பு பகைமையற்ற சகோதரத்துவமே நமது நெறி;*
- *மத நம்பிக்கையிருந்தாலும் அதை மதவெறியாக மாற்றிக் கொள்ளாத மனித நேயமே;*

*நமது தனிச் சிறப்பு;*

*சூழ்ந்து வரும் ஆபத்துகளை முறியடித்து, தமிழகத்தின் தனித்துவத்தைக் காப்போம், வாரீர்!*

**– திராவிடர் விடுதலைக் கழகம்**

(திராவிடர் விடுதலைக் கழகத்தின் பரப்புரைப் பயணம் - ஆகஸ்டு 5இல் கோவை, சென்னை, மேட்டூர், மயிலாடுதுறை, மதுரை ஆகிய ஊர்களிலிருந்து புறப்பட்டு ஆக.12ஆம் தேதி திருச்செங்கோட்டில் நிறைவடைகிறது. பரப்புரைப் பயணத்தின் நோக்கத்தை விளக்கும் துண்டறிக்கை.)

## சமூக நீதிப் பயணம் – சென்னை மாவட்டம் தயாராகிறது

*23.07.2017 மாலை 6 மணிக்கு சென்னையில் கழக தலைமை அலுவலகத்தில் இரா. உமாபதி (சென்னை மாவட்ட செயலாளர்) தலைமையில் சென்னை மாவட்ட கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தின் தொடக்கமாக யுவராஜ் கடவுள் மறுப்பு கூறினார். கலந்துரையாடல் கூட்டத்தில் ஆகஸ்ட் 05, 2017 தொடக்க பொதுக்கூட்டம் முதல் ஆகஸ்ட் 12, 2017 மாலை திருசெங்கோட்டில் நடைபெறவிருக்கும் நிறைவு விழா பொதுக்கூட்டம் வரை தமிழ்நாடு முழுவதும் “சமூக நீதிப் பரப்புரை பயணம்” குறித்து பல்வேறு கருத்துகள் விவாதிக்கப்பட்டது.*

*தொடர்ந்து, 28.07.2017 வடசென்னை, திருவேற்காடு பகுதியில் “வஞ்சிக்கப்படும் தமிழ்நாடு” என்ற தலைப்பில் நடைபெறவிருக்கும் பொதுக்கூட்டம் பற்றியும், கடந்த 15.07.2017ல் நடைபெற்று முடிந்த காமராசர் விழா பற்றியும், அடுத்த கட்ட செயல்பாடுகள் குறித்தும் கலந்தாலோசிக்கப்பட்டது.*

*கலந்துரையாடல் கூட்டத்தில், அன்பு தனசேகரன் (தலைமைக் குழு உறுப்பினர்), தபசி குமரன் (தலைமை நிலைய செயலாளர்), அய்யனார் (தலைமைக் குழு உறுப்பினர்) மற்றும் இயக்க பொறுப்பாளர்கள் பலரும் கலந்து கொண்டனர். வேழவேந்தன் (சென்னை மாவட்ட தலைவர்) நன்றி தெரிவித்தார்.*

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 27th July 2017

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN